3. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) ஒரு நிமிடம் உட்காருங்கள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் நான்காவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக (*Panel of Chairmen*) நியமிக்கிறேன்:*

1. *திரு. க. அன்பழகன்*
2. *திரு. நா. இராமகிருஷ்ணன்*
3. *திரு.* S.R. *இராஜா*
4. *திரு. தா. உதயசூரியன்*
5. *திரு. துரை. சந்திரசேகரன்*
6. *முனைவர்* T.R.B. *ராஜா*

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் முனைவர்* T.R.B. *ராஜா, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.*

முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2023 ஆம் ஆண்டுகளுக்கான மதிப்பீட்டுக் குழுவின் ஐந்தாவது அறிக்கையைக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, பொது கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*